# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம்
## (கூட்டிணைத்தல்)

**மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

---

*மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ பொன். செல்வராசா அவர்களால் 2013, யூன் மாதம் 06 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2013, மே மாதம் 27 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

*பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது*

---

[ **247 ஆம் சட்டமூலம்** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 6.00** **தபாற் செலவு : ரூபா 5.00**

2-PL 007329-350 (2013/06)

## மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்)

## மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

''மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம்'' என அழைக்கப்படுவதும், அறியப்படுவதுமான சங்கமொன்று அதன் உறுப்பினர்களால் உடன்பட்டுக் கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்கச் சொல்லப்பட்ட சங்கத்தோடு தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காகவும் அதன் பல்வேறு குறிக்கோள்களை எய்தும் நோக்கத்துக்காகவும் ;

அத்துடன், சொல்லப்பட்ட சங்கமானது கூட்டிணைக்கப்படுவதற்கு விண்ணப்பித்துள்ளதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்களுக்கு நன்மைபயக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப் பெயர்.*

**1**. இச்சட்டம், 2013 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தைக் கூட்டிணைத்தல்.*

**2**. இச்சட்டம் தொடங்குவதிலிருந்தும் அதன் பின்னரும் (இதனகத்துப்பின்னர் ''சங்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கத்தின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ள அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இதன்பின்னர் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப் பின்னர் ''கூட்டுத்தாபனம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) ''மட்டக்களப்பு வாலிப கிறிஸ்தவ சங்கம்'' என்ற பெயரின் கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமை கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் அது வழக்குத் தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதி

2-PL 007329 -50 (2013/04)

ராக வழக்குத் தொடுக்கவும்படலாம். பொதுஇலச்சினை ஒன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அந்த இலச்சினையை மாற்றவும் முழுத்தத்துவமும் அதிகாரமும் கொண்டிருத்தலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.*

**3**. கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான குறிக்கோள்கள் மட்டக்களப்பு வாலிபர்கள், சிறார்கள், பொது மக்களின் ஆன்மீக அறிவியல்சார், உடல்சார், சமூக நலன்களை மேம்படுத்துவதாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

*கூட்டுத்தாபனத்தின் பொதுத் தத்துவங்கள்.*

**4**. இச்சட்டத்தினதும் வேறேதேனும் எழுத்திலான சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை அல்லது அவற்றுள் எதையேனும் மேம்படுத்துவதற்கு அல்லது முன்னேற்றுவதற்கு அவசியமானவாறான அல்லது விரும்பத்தக்கவாறான எத்தன்மையனவுமான அத்தகைய எல்லாச் செயல்களையும், கருமங்களையும், காரியங்களையும், செய்யவும், புரியவும், நிறைவேற்றவும் கூட்டுத்தாபனம் தத்துவமுடையதாதல் வேண்டும். இத்தத்துவத்துள், வங்கிக் கணக்குகளைத் தொடங்குதல், செயற்படுத்தல், முடிவுறுத்தல் என்பவற்றுக்கும், பிணைப்பொறுப்புடன் அல்லது பிணைப் பொறுப்பில்லாமலோ பணம் கடன் பெறுவதற்கும் அல்லது திரட்டுவதற்கும், மானியக் கொடைகளையும் நன்கொடைகளையும் பெறுவதற்கும் அல்லது சேகரிப்பதற்கும் அதன் நிதியங்களை முதலீடு செய்வதற்கும், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு தேவையான அலுவலர்களையும், சேவையாளர்களையும் வேலையில் ஈடுபடுத்தல், வேலைக்கு அமர்த்தல், வேலையிலிருந்து நீக்கல் என்பவற்றுக்குமான தத்துவங்களும் அடங்கும்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய அதன் சார்பில் ஆக்கப்பட்ட விதிகளில் ஏற்பாடு செய்யப்படக்கூடியதும் அதற்கிணங்க தேர்ந்தெடுக்கப்பட்டதுமான அத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களைக் கொண்டமைந்த பணிப்பாளர் சபையொன்றினால் கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்பட வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று பதவி வகிக்கும் பணிப்பாளர்கள் சபையே கூட்டுத்தாபனத்தின் முதலாவது பணிப்பாளர் சபையாக அமைதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6.** (1) கூட்டுத்தாபனத்தின் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமளித்து வாக்களிக்கும் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய தகுதி பெற்ற உறுப்பினர்களின் நான்கில் மூன்றுக்குக் குறையாத பெரும்பான்மை கொண்டு, கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காகவும் அதன் அலுவல்களை முகாமை செய்வதற்காகவும் கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் ஒவ்வாதனவாகவிராத விதிகளைக் காலத்துக்குக் காலம் ஆக்குதல் அதற்குச் சட்ட முறையானதாதல் வேண்டும்.

(2) இச்சட்டம் தொடங்கும் தேதியில் வலுவிலிருந்த கழகத்தின் விதிகள், அவை இச்சட்டத்தின் அல்லது வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்தின் ஏற்பாடுகளை ஒவ்வாதனவாகவிராத அளவுக்கு, இச்சட்டத்தின்கீழ் கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட விதிகளாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதி (1) ஆம் உட்பிரிவின்கீழ் அவ்வித விதி ஆக்கப்படக்கூடிய அதேவிதத்தில் திருத்தப்படலாம் அல்லது ஒழிக்கப்படலாம்.

(4) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைந்தோராதல் வேண்டும்.

*சங்கத்தினால் அல்லது சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவான கடன்கள்.*

**7.** இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர் முந்திய நாளன்று சங்கத்துக்குள்ள எல்லாக் கடன்களும், பொறுப்புக்களும் கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதலும் கொடுத்துத் தீர்க்கப்படுதலும் வேண்டும். அத்துடன் அத்தேதியில் சங்கத்திற்குச் செலுத்தப்படற்பாலனவையான ஒப்பப்பணங்களும் உதவு தொகைகளும், இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படல் வேண்டும்.

*கூட்டுத்தாபனம் அசைவுள்ளதும் அசைவற்றதுமான ஆதனத்தை வைத்திருத்தல்.*

**8**. ஏதேனும் கொள்வனவு, மானியக்கொடை, மரணசாசனக் கையளிப்பு மூலமாகவோ அல்லது வேறுவகையாகவோ அதற்குரித்தாக்கப்படும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம் எதனையும் கொள்ளவும், வைத்திருக்கவும் கூட்டுத் தாபனம் சட்டப்படி ஆற்றலுடையதாதலும், இயலுமானதாதலும் வேண்டுமென்பதுடன் அத்தகைய ஆதனம் யாவும் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காகவும், கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமையவும் அவற்றை விற்க, ஈடுவைக்க, குத்தகைக்குக் கொடுக்க, கொடுத்து மாற்ற அல்லது வேறுவகையில் கையாள உள்ள முழுத்தத்து வத்துடன் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத் தாபனத்தின் இலச்சினை எவ்வாறு இடப்பட வேண்டும் என்பது.*

**9**. கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது, கூட்டுத்தாபனத் தின் விதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு இத்தகைய எண்ணிக்கையினரான உறுப்பினர்களின் முன்னிலையிலல்லாது எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதலாகாது. அவர்கள் தாம் சமுகமாயிருந்ததற்கு அடையாளமாக அச்சாசனத் தில் தமது பெயர்களை எழுதிக் கையொப்பமிடுதல் வேண்டுமென் பதுடன் அத்தகைய கையொப்பமிடுதலானது எவரேனும் ஆள் அதன் சாட்சிக்காரராக கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதலும் வேண்டும்.

*குடியரசினதும் ஏனையோரினதும் உரிமைகளைப் பேணுதல்.*

**10**. இச்சட்டத்தில் அடங்கியுள்ள எதுவும் குடியரசின் உரிமை களையேனும் அல்லது அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட ஏதேனும் குழுவின் உரிமைகளையேனும் பாதித்தலாகாது.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**11**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்